# வாடிக்கையாளர்கள் பங்கேற்கும் போட்டி

சென்னை, நவ. 5 -

இந்தியாவில் உருளை கிழங்கு சிப்ஸ் தயாரிப்பில் முன்னணியில் உள்ள லேஸ் நிறுவனம் வாடிக்கையாளர்கள் பங்கேற்கும் போட்டிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

உங்களுக்கு பிடித்த நறுமணச்சுவையை எங்களுக்கு தாருங்கள் என்பதே அந்த போட்டியின் தலைப்பு. நறுமணத்துடன் சுவையுள்ள சிறந்த உருளைக்கிழங்கு சிப்ஸ்களுக்கு முதல் பரிசாக ரூ.50 லட்சம் வழங்கப்படும். அல்லது அந்த சிப்ஸ் விற்பனையில் 1 சதவீத தொகை வழங்கப்படும்.

என்டிடிவி குட் டைம்ஸ் டிவி நிகழ்ச்சி தொகுப்பாளரும் பிரபல சமையல் கலைஞருமான ஆதித்யா பால் தலைமையிலான குழுவினர் சிறந்த படைப்புகளை தேர்வுசெய்வார்கள். வாடிக்கையாளர்கள் தங்களுக்கு பிடித்த நறுமணத்தை 2009 நவம்பர் முதல் 2010 ஜனவரிக்குள் லேஸ் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.